‘மாற்றம்’ என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள் - மாநில உரிமைகளைத் தாரை வார்க்காமல்

ஆளுநரின் ஆய்வு நடைமுறையை உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்!

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 4-

மாற்றம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள் மாநில உரிமைகளைத் தாரை வார்க்காமல் ஆளுநர் ஆய்வு செய்யும் நடைமுறையை உடனே நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

ஆளுநர் ஆய்வு செய்தார்’ என்ற கூவத்தூர் ஆட்சிக் கால வரலாறு, தற்போதைய குதிரை பேர ஆட்சியில் மீண்டும் திரும்புகிறது.

மக்கள் பிரதிநிதிபோல் ஆய்வு நடத்தும் ஆளுநர்!

மதுரை சென்றிருந்த ஆளுநர் ராஜேந்திர அர்லேகர், தான் நியமன பதவியில் - அதுவும் கூடுதல் பொறுப்பில் தமிழ்நாடு ஆளுநராக இருப்பதை மறந்து, மக்கள் பிரதிநிதி போல ஆய்வு நடத்தி இருக்கிறார்.

அரசியலமைப்புக்கும் - மாநில உரிமைக்கும் எதிரான இந்தச் செயலில் ஈடுபட்ட ஆளுநருக்கும், இதை அனுமதித்த #SofaModel அரசிற்கும் கடும் கண்டனங்கள்.

ஆளுநர் மாளிகையின் பராமரிப்பே தமிழ்நாடு அரசிடம் இருக்கும் போது, ‘வைகையை அரசு சீரமைக்காவிட்டால் ஆளுநர் மாளிகை களம் இறங்கும்’ என்று அடாவடியாக பேசி இருக்கிறார். ஆளுநரின் இந்த அசட்டுத் துணிச்சலுக்கு ஆளுங்கட்சியின் கையாலாகாத்தனமே காரணம்.

ஆளுநர் பங்கேற்ற அரசு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்தின் முக்கியத்துவம் குறைக்கப்படும் அளவுக்கு, என்ன ‘காம்ப்ரமைஸ்’ செய்யப்பட்டது என்று சட்டமன்றத்தில் கேட்டிருந்தோம்.

ஆளுநரிடம் சோபா மாடல் அரசின் சமரசப்போக்கு!

அதற்கு உரிய பதிலைச் சொல்லாத ஆளுங்கட்சியினர், இன்றைக்கு ஆளுநரை ஆய்வு செய்யவிட்டு, மாநில உரிமைகளை காம்ப்ரமைஸ்’ செய்திருப்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

சட்டத்துக்குப் புறம்பாக அடுத்தக் கட்சி எம்.எல்.ஏ.க்களை Panic buying செய்யும் ஆளுங்கட்சி, ஆளுநர் நடவடிக்கை எடுத்துவிடுவாரோ என்ற anxiety-யில் அவரது ஆய்வை அனுமதிக்கிறதா?

முந்தைய அதிமுக ஆட்சிக்காலத்தில் அப்போதைய ஆளுநர் ஆய்வுகளில் ஈடுபட்ட போது, அவர் சென்ற இடங்களில் எல்லாம் கழகத்தினர் கருப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு தெரிவித்தோம். கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்காலத்தில் இது போன்ற நிகழ்வுகளை நாங்கள் அனுமதித்ததில்லை.

மாநில உரிமைகளை தாரை வார்க்கலாமா?

ஆகவே, மாற்றம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள், மாநில உரிமைகளைத் தாரை வார்க்காமல், ஆளுநர் ஆய்வு செய்யும் நடைமுறையை உடனே நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கூவத்தூர் ஆட்சிக்கால வரலாறு தற்போதைய குதிரை பேர ஆட்சியில் மீண்டும் திரும்புகிறது!

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அமெரிக்கத் துணைத் தூதர் மரியானா எல்.நெய்ஷீலர் அவர்கள் நேற்று முன்தினம் (2-7-2026) மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார். அதுபோது கழகத் தலைவர் அவர்கள், “The Dravidian Model” புத்தகத்தை வழங்கினார். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உள்ளார்.

அரசு நாற்றங்கால் பண்ணையில் கிழிந்து தொங்கும் பசுமை வலை!

ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் பாதிப்பு!

மதுராந்தகம். ஜூலை 4 – வெள்ளபுத்தூர் அரசு நாற்றங்கால் பண்ணையில் கிழிந்து தொங்கும் பசுமை வலையால் மரக்கன்றுகள் சேதம் அடைந்து பாதிப்பு ஏற்படும் அவல நிலையில் உள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், வெள்ளபுத்தூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு நாற்றங் கால் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள பசுமை நிழல் வலை பல இடங்களில் கிழிந்து சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக அங்கு வளர்க்கப்பட்டு வரும் பல்வேறு வகையான மரக்கன்றுகளின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அரசின் பசுமைத் திட்டங்களுக்காகவும், பொதுமக்கள் மற்றும் விவசாயி களுக்கு விநியோகம் செய்வதற்காகவும் இந்த நாற்றங்கால் பண்ணையில் மா, பலா, வேம்பு, புங்கன், தேக்கு, புவரசு உள்ளிட்ட பல்வேறு ரகத்தில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், பசுமை நிழல் வலை நீண்ட நாட்களாக சேதமடைந்த நிலையி லேயே இருப்பதால், நேரடி வெயில், மழை மற்றும் பலத்த காற்றின் தாக்கத்தால் மரக்கன்றுகள் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், கிழிந்துள்ள நிழல் வலை வழியாக பறவைகள் மற்றும் கால்நடைகள் நுழைந்து மரக்கன்றுகளுக்கு சேதம் விளைவிக்கும் அபாயமும் நிலவுகிறது. இதனால் அரசின் மரக்கன்று உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகளும் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. எனவே, சேதமடைந்துள்ள பசுமை நிழல் வலையை உடனடியாக சீரமைத்து அல்லது புதிதாக அமைத்து, அரசு நாற்றங்கால் பண்ணையில் உள்ள மரக்கன்றுகளை பாதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

நீதிமன்றங்களில்

அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு ரூ.30 லட்சம் லஞ்சம்!

உயர்நீதிமன்றத்தில் த.வெ.க. வழக்கறிஞர் மனு!

சென்னை, ஜூலை 4- 30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெற்றுக்கொண்டு, அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டு வருவதாக த.வெ.க. வழக்கறிஞரே குற்றஞ்சாட்டி யிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் சாலாமேடு பகுதியை சேர்ந்த த.வெ.க. வழக்கறிஞர் அணி இணை செயலாளர் ஞானசௌந்தரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பின்படி, அரசு வழக்கறிஞர் பணிக்கு விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி முடிவடையும் முன்பே நியமனப் பட்டியல் சமூக வலைதளங்களில் பரவியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், த.வெ.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் மூலம், 5 லட்சம் முதல் 30 லட்சம் வரை லஞ்சம் பெற்று அரசு வழக்கறிஞர்கள் நியமனங்கள் நடைபெற்றதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

முதல்வர் விஜய், தனது ஆட்சியில் லஞ்சம், ஊழல், விதிமீறல் ஆகியவற்றை அனுமதிக்க மாட்டேன் என்று கூறிவரும் நிலையில், சட்டத்துறை செயலாளர், மாவட்ட ஆட்சியர், த.வெ.க. நிர்வாகிகள் அரசு வழக்கறிஞர் நியமனத்தில் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளார். மேலும், அரசு வழக்கறிஞர் நியமன நடைமுறைக்கு இடைக்காலத் தடை விதிக்கவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு அப்பட்டமான ஏமாற்றம்!

மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வை முறையாக நடத்துக!

பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை, 4- மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வை முறையாக நடத்தவும் என்று தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வு, விதிமுறைகளுக்குப் புறம்பாக நேற்று முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்களுக்கான பதவி உயர்வு அரசாணை எண் 6ன் பிரகாரம், மாற்றுத்திறனாளிகளுக்கான பொதுப் பட்டியல் (General) தனியாகவும், 4 சதவீத உள்ஒதுக்கீட்டுப் பட்டியல் (Quota) தனியாகவும் பிரிக்கப்பட்டு, காலிப்பணியிடங்கள் காட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கடந்த 29/06/2026 அன்று வெளியிட்ட முன்னுரிமைப் பட்டியலில், பொதுப் பட்டியலில் வரவேண்டியவர்களை உள்ஒதுக்கீட்டுப் கோட்டாவில் கணக்கு காட்டியுள்ளனர். இதனால் கோட்டாவின் கீழ் வரக்கூடிய தகுதியான மாற்றுத்திறனாளிகள் பயனடையாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மொத்தம் பதவி உயர்வு வழங்கப்படும் 439 பணியிடங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு 17 இடங்கள் வழங்கப்பட வேண்டும். இதில் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுப் பிரிவுக்குச் சென்றது போக, மீதமுள்ள 13 இடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கோட்டாவில் காட்டப்பட்டுள்ளன. இந்த 13 இடங்களில், 6 இடங்கள் மாற்றுத்திறனாளிகளின் பணிமூப்பு அடிப்படையில் பொதுப் பட்டியலிலேயே (General) சென்றிருக்க வேண்டியவை ஆகும். அதனை உள்ஒதுக்கீட்டுப் கோட்டாவில் கணக்கு காட்டியுள்ளதால், கோட்டாவின் கீழ் வர வேண்டிய மாற்றுத்திறனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அப்பட்டமான விதிமீறல் குறித்து, மாற்றுத் திறனாளி ஆசிரியர்கள் சங்கத்தின் மாநில இணைச் செயலாளர்கள், நேற்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் திருமதி. மதுமதி மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. லட்சுமி ஆகியோரை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அப்போது, ஆணையர் லட்சுமி பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, “கலந்தாய்வை நிறுத்தி விட்டு, கோப்புகளை நேற்று (03/07/2026) மாநில ஆணையத்திற்கு எடுத்து வாருங்கள்” என்று அறிவுறுத்தினார். அதற்கு இயக்குநரும் ஒப்புதல் தெரிவித்தார். ஆனால், சொன்னபடி கலந்தாய்வை நிறுத்தாமல், நேற்று காலை 8:30 மணி முதல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மேல் ‘இறுதி பட்டியல்’ (Final List) வெளியிடப்பட்டது. அதில் 2 மற்றும் 3ஆம் பக்கங்களில் மாற்றுத்திறனாளிகளைப் பரிசீலனை செய்து, சுழற்சி முறையில் பொதுப் பட்டியலையும் கோட்டாவையும் பிரித்துக் காட்டியிருப்பதாகத் தலைப்பை (Title) மட்டும் மாற்றியுள்ளனர். ஆனால், உள்விவரப் பட்டியலில் பொதுப் பிரிவில் இருக்க வேண்டியவர்களை மீண்டும் கோட்டாவிலேயேதான் வைத்துள்ளனர். கடந்த 29/06/2026 அன்று வெளியான பட்டியலில் இருந்த தவறுகளை எதையுமே திருத்தாமல், வெறும் தலைப்பை மட்டும் மாற்றி மாற்றுத்திறனாளிகளுக்குப் பாதகமான அப்பட்டமான ஏமாற்றத்தைச் செய்திருக்கிறார்கள்.

இந்த மாற்றுத்திறனாளிகள் அமைச்சகம் முதலமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருந்தும், இந்த விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பது மாற்றுத்திறனாளிகளைத் தமிழ்நாட்டில் அனாதையாகவிட்டுவிட்டாரோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு முன்பு, மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலில், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்காக எண்ணற்ற ஏராளமான நலத்திட்டங்களைச் செய்திருக்கிறார். அவரது காலகட்டத்தில் பதவி உயர்வுகளில் இது போன்ற பிரச்சனைகள் ஒருபோதும் எழுந்ததில்லை.

இவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் வகுத்திருக்கின்ற முறைப்படியும் இந்திய பார்வையற்றோர் இணையம் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பதவி உயர்வு தீர்ப்பை, முறையாக பள்ளிக்கல்வித்துறை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் சார்பாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தியுள்ளார்.

சொந்தக் கட்சிக்காரர்களிடமே பகல் கொள்ளையடிக்கும் கமிஷன் அரசு!

கிழிந்து தொங்கும் த.வெ.க.வின் ஊழல் முகமூடி!

தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை,ஜூலை.4- என் ஆட்சியில் லஞ்சம் இருக்காது, ஊழல் இருக்காது! நான்தான் இந்த ஆட்சியின் ஒற்றைப் பவர் சென்டர் என்று கேமரா முன்னால் நின்று வீராவேசமாக ரீல்ஸ் விட்ட பொம்மை CM விஜய்யின் யோக்கியதை, இன்று உயர் நீதிமன்றப் படியேறி வீதிக்கு வந்து சந்தி சிரிக்கிறது!

அரசு வழக்கறிஞர் பதவிகளுக்கு 5 லட்சம் முதல் 30 லட்சம் வரை பகிரங்கமாக லஞ்சம் வாங்கிக்கொண்டு, சந்தையில் காய்கறி விற்பது போல அரசுப் பதவிகளை ஏலம் விடுவது வேறு யாருமல்ல, தவெகவின் தலைவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் பொதுச் செயலாளரான அமைச்சர் ஆனந்தும், மாவட்டச் செயலாளர்களும்தானாம்!

இதைச் சொல்வது எதிர்க்கட்சிகள் அல்ல, சொந்தத் தவெக கட்சியின் வழக்கறிஞர் அணி நிர்வாகியே உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து முகத்திரையைக் கிழித்துள்ளார்.

மேடையில் மட்டும் தூய சக்தி நாடகம், ஆனால் திரைக்குப் பின்னால் கட்சியின் பொதுச்செயலாளர் தொடங்கி மாவட்டச் செயலாளர்கள் வரை அத்தனை பேரையும் கமிஷன் ஏஜெண்டுகளாக மாற்றி லட்சக்கணக்கில் பதவி பேரம்!

அரசுப் பதவிக்காகத் தன் சொந்தக் கட்சிக்காரர்களிடமே இரக்கமில்லாமல் லஞ்சம் பிடுங்கும் இந்த பித்தலாட்டக் கும்பல், எந்தப் பின்புலமும் இல்லாத சாதாரணப் பொதுமக்களிடம் ஒரு வேலைக்கு எவ்வளவு கமிஷன் கேட்பார்கள்?

ஊழல் வழக்குகளில் சிக்கிய பெருச்சாளிகளுக்கெல்லாம் வாஷிங் மெஷினாக மாறி அடைக்கலம் கொடுப்பதில் தொடங்கி, இன்று நேரடியாக லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசுப் பதவிகளை விற்கும் அளவுக்குத் தரம் தாழ்ந்து நிற்கும் இந்தத் தவெகவை, இனிமேல் தமிழ்நாட்டைச் சூறையாட வந்த ஊழல் சக்தி என்றுதான் இனி அழைக்க வேண்டும் என தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

நீட் மறு தேர்விலும் குளறுபடி நடந்துள்ளது அம்பலம்!

புதுடெல்லி,ஜூலை.- நீட் மறு தேர்விலும் குளறுபடி நடந்துள்ளது அம்பலமாகி உள்ளது. அதன்படி, இயற்பியல் வினாத்தாளில் இரண்டு கேள்விகளில் தவறு நடந்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த ஜூன் 21ஆம் தேதி நீட் மறு தேர்வு நடைபெற்றது. இந்நிலையில், இயற்பியல் வினாத்தாளில் இரண்டு கேள்விகளில் தவறு நடந்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

இதையடுத்து தேசிய தேர்வு முகமை 40வது கேள்வியை முழுமையாக நீக்கி உள்ளது. மற்றொரு கேள்வியான 22 ஆம் எண் கேள்விக்கு இரண்டு சரியான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் இரு விடைகளுக்கும் மதிப்பெண் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சரியான பதில் எதுவும் வழங்காத கேள்வி நீக்கப்பட்டுள்ளது.

இதனால், தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களுக்கும் அந்த கேள்விக்கு 4 மதிப்பெண்கள் வழங்கப்படும். மற்றொரு கேள்வியில் இரண்டு பதில்கள் சரியானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த கேள்வியில் சரியான இரண்டு பதில்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்த மாணவர்களுக்கு மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

சூலூர் எஸ்.ஆர்.எஸ் திருமண மண்டபத்தில் பாவேந்தர் பேரவை ஐம்பெரும் விழா மற்றும் சூடு மாறாது சூரியனுக்கு எனும் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா கருத்துரையாற்றினார். இதில் மாநில கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன் எழுதிய பேச வைத்த பெரியார் நூலை ஆ.இராசா வெளியிட கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் முதல் பதிப்பை பெற்றுக்கொண்டார். உடன் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், தலைமை செயற்குழு உறுப்பினர் இருகூர் சந்திரன், சூலூர் பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன், திராவிட இயக்கத் துணை பொது செயலாளர் சிற்பி செல்வராஜ் உள்பட பாவேந்தர் பேரவை நிர்வாகிகள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி மாவட்டம் லால்குடியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் உரையாற்றினார். கழக செய்தி தொடர்பு குழு துணைத் தலைவர் மருது அழகுராஜ், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், முன்னாள் எம்எல்ஏ சௌந்தர பாண்டியன், நகர் மன்ற தலைவர் துரை, பொருளாளர் துரைராஜ் உட்பட ஒன்றிய செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.